# தமிழ்ச்சோலை

அரையாண்டிதழ் மாணாக்கர் வெளியீடு

மலர் : 12 | மார்ச் : 2022 | அரும்பு : 21

## இணைய இதழ்




தமிழாய்வுத்துறை

காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் (மூன்றாம் சுற்று) 'A' தகுதி பெற்றது

திருச்சிராப்பள்ளி – 18

# ஆசிரியர் குழு

- முனைவர் ச.இராமலெட்சுமி
- முனைவர் மு.ஜெயலெட்சுமி
- முனைவர் மா.ஆசியாதாரா
- திருமதி.பொ.அபிராமி

பெண்ணின் வெற்றி அவள் அணியும் ஆடை, ஆபரணங்களில் இல்லை. பெண்களுக்கான நிலையான வெற்றி அவள் கற்கும் கல்வியில் இருக்கிறது. பெண்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்தும் ஆயுதம் கல்வி எனும் நோக்கில் மகளிரின் கல்வி முன்னேற்றத்திற்கு வழிவகுத்து வருகிறது காவேரி மகளிர் கல்லூரி. தமிழ்மொழி உயிருக்கு நிகரானது எனத் தமிழ்மொழியின் வளர்ச்சியைத் தங்கள் கடமையெனச் சிந்தித்துச் செயலாற்றி வருகிறது தமிழாய்வுத்துறை.

பள்ளிப்பருவம் முடிந்து கூட்டுப் புழுக்களாய் வரும் மாணவியரின் திறமைகளை உலகிற்கு அடையாளம் காட்டி அவர்களைவண்ணத்துப்பூச்சிகளாய் உருமாற்றும் வல்லமை கல்லூரிப் பருவத்திற்கு உண்டு. அவர்களின் திறமையுடன் கல்வியும் இணையும் போது பெண்களின் வாழ்க்கை ஒளிர்கிறது.

மாணவர்களுக்குக் கல்வி மட்டுமல்லாது அவர்களிடம் புதைந்து கிடக்கின்ற கற்பனை ஆற்றல்களையும், சிந்திக்கும் திறன்களையும் வளர்க்கும் திறவுகோலாகத் திகழ்கிறது தமிழ்ச் சோலை என்னும் இதழ். ஒவ்வொரு ஆண்டிற்கும் இரு முறை இவ்விதழ் வெளிவருகின்றது. உயர்ந்த சிந்தனையும், விடாமுயற்சியும் இருந்தால் வெற்றி பெறலாம் என்ற சிந்தனையுடன் இப்பருவத்திற்குரிய இணைய வழி இதழாக மலர்கிறது தமிழ்ச்சோலை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கவிதைகள் | - | 1 |
| சிறுகதை | - | 8 |
| கட்டுரை | - | 11 |
| மருத்துவக் குறிப்புகள் | - | 17 |
| விடுகதைகள் | - | 18 |
| தெரிந்து கொள்வோம் | - | 20 |
| தகவல் களஞ்சியம் | - | 22 |
| ஓவியங்கள் | - | 25 |

# நிலா



என்னை ஏன் நீ
தனித்து விட மறுக்கிறாய்
உன்னைத் தவிர மாற்றானைள
நேசித்து விடுவேன் என்றா?
உன் ஸ்பரிசத்தை என்மேல்
படரவிட்டுப் பந்தம் தொடர்கிறாய்
மூச்சுவிடும் ஒவ்வொரு நொடியும்
என் சுவாசம் ஆகிறாய்
என்னுடன் மாதம் ஒருமுறை
மறவாமல் சண்டையிட்டு
முகம் காட்ட மறுக்கிறாய்
மனம் வாடாதே
வட்ட முக வெள்ளைப் பெண்ணே
வானில் நீயிருக்கும் வரை
மண்ணில் நானிருக்கும் வரை
வாசம் மாறாமல் நேசிப்போம்

**ஜா.மோனிகா ஜாய்சி**

**முதுநிலை முதலாமாண்டு கணிதவியல்**





## நட்பின் தொடர்ச்சி

பள்ளி நட்பு பழகிய காலம் முதல்
கல்லூரி நட்பு கடந்த கால நினைவுகளாய்
பணியின் நட்பு உறவுகளாய்
இல்லத்தின் நட்பு இனிமை தருவதாய்
உறவுகளின் நட்பு உன்னதமாக
நட்புகள் மாறிக் கொண்டே போகலாம்
நம் மனம் என்றும் தோழமையுடன்
தொடரும்
உண்மையான நட்பிற்காய்…..

**சுனிதா.பி**

**இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்**

## முதியோர் இல்லம்

தாயில் சிறந்த கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
என்று சொல்லி
தாயையும் தந்தையையும்
மதித்தால் மட்டும் போதாது
உணவின்றி வாடும் முதியோர் இல்லங்களைச்
சிந்தித்து நம் பெற்றோரை நம் இல்லத்தில் பராமரிப்போம்.
முதியோர் இல்லம் அமைவதைத் தடுப்போம்
வயதான நேரத்தில் துணை தேவை
பிறர் துணை அல்ல
பிள்ளைகளின் துணை!

**ஷமினா யாஸ்மின்.அ**

**இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்**

## நட்பு



வாழும் வரை வாழ்க்கை...

சிரிக்கும் வரை கண்ணீர்...

வெல்லும் வரை தோல்வி...

உதிரும் வரை பூக்கள்...

விடியும் வரை நிலவு...

வாழ்வு முடியும் வரை நட்பு...

**யு.சிவசங்கரி,**

**இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்**

## ஓய்வின்றித் துடிக்கும் இதயமே!



ஓயாது நீ துடிக்கும் துடிப்பு

அதுவே இந்த உலகின்

மிகச் சிறந்த படைப்பு

என் தாயின் கருவறையில்

எனக்கென உதயமானாய்

என்னை இயங்கச் செய்கின்றாய்

இரவு பகல் மறக்கின்றாய்

குருதியைத் தூய்மை செய்கின்றாய்

தூய்மைப் பணியாளனாய்

காக்கும் காவலர் போல

உறுப்புகளைப் பாதுகாக்கிறாய்

உழவன் தான் வளர்க்கும் பயிர்களுக்கு

நீர் பாய்ச்சுவது போல

உடலின் உறுப்புகளுக்குக்

குருதியைப் பாய்ச்சினாய்

துன்பம் செய்ய துணியும்போது
துடிதுடித்து தடுக்கிறாய்
இரக்கம் எனப் பெயர் எடுத்தாய்
அன்பிற்கு உருவம் கொடுத்தாய்
தன்னலம் என்பது உனக்கில்லை
தரணியில் நீயின்றி உயிர்கள் இல்லை
என்னில் உன் சேவை முடிந்தாலும்
இம்மண்ணில் உன் சேவை தொடருமே
உன் மருத்துவத்துக்கு
எல்லை இல்லை உன்னை மறக்க எனக்கு
மனம் இல்லை
உனக்கென ஒரு நாளாம்
அது உலக இதய திருநாளாம் (29.09)

**க.சுகுமாரி**
**இளநிலை இரண்மாண்டு கணிதவியல்**



## என் மனவானில்

என் மனவானில் சிறகடித்து
பறக்கும் தேவதையே!
அகிலத்தின் துவக்கமே
அன்பின் மறு உலகமே
அடிமைப்பட்டது ஒரு காலம்
மீண்டெழுந்தோம் இக்காலம் - ஆம்
எத்தனை எத்தனை துயரங்கள்
எது வந்தாலும் துணியக் கற்றோம்
மனஉறுதியை அணியக் கற்றோம்
வேதனையின் நடுவில் புன்னகை
அதுவே பறிக்க முடியாத
பெண்ணின் பொன்நகை
சாத்திரங்கள் நம்மைப் புதைக்க
சீர்திருத்தங்கள் நம்மைச் சாதிக்க
பாரதி கண்ட புதுமைப்

பெண்ணே! அது நீதானே

விண்வெளியில் பயணம் செய்தாய்

அரசியலிலும் கால் பதித்தாய்!

விளையாட்டிலும் வெற்றி கண்டாய்!

பிண்டம் எதுவென்று அறியாமல்

பிரவச வலியையும் பாராமல்

அனைத்துயிரையும் இவ்வுலகைக்

காணச் செய்த பெண்ணினமே!

நீ மண்ணில் மட்டுமல்ல

விண்ணையும் தாண்டி சரித்திரம் படைக்க

இவ்வுலகம் உனக்கான சிறகை

விரித்துக் காத்திருக்கிறது, பெண்ணே

பறந்து வா சாதனை படைக்க

என் மனவானில்

**சே.காயத்ரி**

**இளநிலை மூன்றாமாண்டு தமிழிலக்கியம்**



## மகளிர்



கண்களில் வழியும் கண்ணீரில்

அன்பைச் சிந்துபவள் !

புன்னகைத்துப் பல மனங்களுக்கு

ஆறுதல் தருபவள்

விரலசைவில் அறுசுவையைத் தருபவள்

அவள் காதோரம் ஆடி அசைந்த கம்மல்

மனவோட்டத்தைச் சொன்னதாம்

அவள் வாழ்வின் மறுபக்கத்தைச் சொன்னதாம்

அவளின் கண்ணின் மை

அவள் வந்துவிட்டதைச் சொல்லியதாம்

அவளின் கொலுசொலி

அவள் மகிழ்ச்சி கொண்ட நேரத்தைச் சொன்னதாம்

அவளின் மருதாணியும்

கண்ணாடி வளையலும்

பின்னிய கூந்தலும்

அவளொரு கலைமகளெனச் சொன்னதாம்

பொற்பாதம் கொண்ட அவள் பூமிக்குப் பாரமில்லை

அவளைப் புரிந்துகொள்ள யாருக்கும் நேரமில்லை

பொய்மை இல்லாத பாவை பூமிக்கு அவள் உதவி

தேவை தேவை தேவை எப்பிறப்பில் என்ன தவம் செய்தேனோ

நானும் பெண்ணாய்ப் பிறந்தேன்

**சே.காயத்ரி**

**இளநிலை மூன்றாமாண்டு தமிழிலக்கியம்**



## சுத்தம் கற்றுக்கொள்

உலகெல்லாம் மாசாச்சி, ஓசோனும் ஓட்டையாச்சி

ஊருக்குள்ளே வெப்பம் தாங்க முடியல

உண்மையைச் சொன்னா யாரும் நம்பல!

தொழிற் சாலைகள் அதிகமாச்சி

தூய்மை எல்லாம் கெட்டுப்போச்சி

வாயுக்களும் மாசாச்சி!

காடெல்லாம் அழிந்துபோச்சி

கழனியெல்லாம் வீடாச்சி

சூழ்நிலையும் கெட்டுப்போச்சி தானுங்க

சுத்தக் காற்றைச் சுவாசிக்க வழி? – நான்

வழி சொல்கிறேன் கேளுங்க!

வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்

வெப்பம் தணிய வழி செய்வோம்

வேண்டும் மழை கிடைக்கும் அப்போ – பாருங்க

நம் வேதனையும் தீரும் நிஜம்தானுங்க!

முடியாது….! அது மூடநம்பிக்கை

முடியாது….? அது அவநம்பிக்கை

முடியும்….! அது தன்னம்பிக்கை

**பா.சுனிதா**
**இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்**

# நட்பின் மாற்றம்




ஒன்றாகப் பள்ளி சென்றோம்
ஒரே தட்டில் பல கைகள் வைத்து
உணவு உண்டோம்.
அம்மா, அப்பா வைத்த
பெயர்களை மாற்றி ஆளுக்கொரு
அடைமொழி பெயர் வைத்து
ஆதிகாரத்துடன் அழைத்து. . .
அடித்து விட்ட ஆசிரியரை
ஆசை தீர திட்டித் தீர்த்து மனதுக்குள்ளே
வழுக்கி விழுந்த வாய்க்காலும்
இன்று வகை வகையாய்
நம் கதைகள் சொல்லும்
அழகான ஆனந்தத்தின்
அசைக்க முடியாத
நினைவுகள் இவை. . . !

விட்டுப் பிடிப்பது நட்பல்ல
விட்டுக் கொடுப்பது நட்பு
கடைசி வரை விட்டு விலகாமல்
இருப்பதுதான் நட்பு. . . !
காரணம் இல்லாமல் கலைந்து போக
இது கனவும் அல்ல
காரணம் சொல்லிப் பிரிந்து போக
இது காதலும் அல்ல
உயிருள்ளவரை தொடரும் உயிர் நட்பு . . !

தடுமாறும்போது தாங்கிப் பிடிப்பவனும்
தடம் மாறும்போது தட்டிக் கேட்பவனும்தான்
உண்மையான நண்பன் . . . !

**ஜி. விஜயலட்சுமி**
**இளநிலை முதலாமாண்டு ஆங்கிலம்**



**சிறுகதை**




## அச்சம் தவிர்

ஊர் எங்கும் அமிர்தாவுடன் பேட்டி நேரலை உங்கள் தமிழ்த் தொலைக்காட்சியில் என்ற விளம்பரம் ஒட்டப்பட்டுள்ளது. அமிர்தா யார் என்று தெரியுமா? கடந்த வாரம் ஆண்கள் மீது அமில வீச்சில் ஈடுபட்டதால் காவல்துறையால் கைது செய்யப்பட்டவர். இன்று விடுதலை செய்யப்பட்ட அவரின் நேரலைதான். நேரலைக்கான நேரம் நெருங்கியது. தொகுப்பாளர் அமிர்தாவிடம் கேள்வி கேட்க முன்வந்தனர். ஆனால் அமிர்தா அவர்களை நிறுத்திப் பேசத்தொடங்கினார். “நான், அப்பா, அம்மா என்ற அழகான குடும்பம்.

எனது வயது 18. சிறுவயதிலிருந்தே என்னுடைய பெற்றோர் தைரியத்துடன் விவேகத்தையும் என்னுள் விதைத்தனர். கடந்த வாரம் மாலை பள்ளிநேரம் முடிந்து வீட்டிற்கு வரும்போது மகிழுந்திலிருந்து இருவர் என் கையைப் பிடித்து இழுத்தனர். என்னைத் தாக்க முயன்றனர். அது என்ன என்று அறிவதற்கு முன்பே அவர்கள் காரில் இருந்த ஒரு தண்ணீரை அவர்கள் முகத்தில் ஊற்றினேன். எனக்கு அப்போதுதான் தெரிந்தது. அது அமிலம் என்று. அவ்விடத்திற்கு உடனே காவல்துறை அதிகாரிகள் வந்தனர். அவர்களுடைய மேலதிகாரி மிகவும் நேர்மையானவர். என்னை அவர்கள் கைது செய்தனர். என்னை யார் வந்து எத்தனை முறை கேட்டாலும் உண்மையை மட்டுமே கூறினேன். அந்த விசாரணையில்தான் தெரிந்தது என்னைத் தாக்கியவர்கள் முன்பே நான்கு பெண்களின் வாழ்க்கையைச் சிதைத்தவர்கள் என்று. அந்த நொடி நான் மிகவும் பெருமை கொண்டேன்.

இன்று காலை என்னுடைய வழக்கு. தீர்ப்பில் நான் என்னுடைய தற்காப்புக்காக அவர்களைத் தாக்கியது குற்றமில்லை என்றும் அவர்களுக்கு எட்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

மேலும், அனைத்துப் பெண்களின் கவனத்திற்கு, நாம் அனைவருமே மெழுகுவர்த்தியைப் போன்றவர்கள். உருகும் கடைசித் தருவாயிலும் வெளிச்சத்தை அனைவருக்கும் தருபவர்கள். ஆனால் என்றும் மற்றவரின் தீஞ்செயலுக்குப் பயந்து அழிந்து விடக்கூடாது. எல்லாம் விதி என்பதை மறந்து விடுங்கள். விதியையும் மதியால் வெல்வோம் என்று வீரநடைப் போடுங்கள். வாழ்க்கையில் அனைவருமே தடுமாறலாம். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் நம்முடைய தடம் மாறக்கூடாது. என்றுமே அச்சம் தவிர், பெருந்துணிவோடு மிளிர்” இவ்வாறு அவர் தன் உரையை முடித்தார்.

மேற்கண்டவாறு நீங்கள் அனைவரும் உங்கள் வாழ்க்கையில் வீரநடை போட வாழ்த்தும் மங்கையராய்ப் பிறக்க மாதவம் செய்த உங்களுள் ஒருவள்.

**ரா.காவியதர்ஷினி**

**இளநிலை முதலாமாண்டு கணிதவியல்**



# தைரியமே அவசியம்

ஒரு குடும்பத்தில் ஏழை விவசாயி தன் மகள்களிடம் புலம்பிக்கொண்டு இருந்தான். “உங்களைப் பெண் கேட்டு யாரும் வரவில்லை. என்ன செய்வேன்? நாய் நரி கேட்டால் கூட கொடுத்து விடுவேன்” என்றான். அதனைக் கேட்டுக் குடும்பத்தில் உள்ள மகள்களும் புலம்பினர். அந்த வழியாக நரி ஒன்று சென்றது.

அது அந்த ஏழை விவசாயியிடம் சென்று, “எனக்கு உன்னுடைய பெண்ணைக் கொடு” என்றது. அதற்கு அவனோ, நான் எப்படி தருவேன், என்றான். அதனைக் கேட்ட நரி “நீ தரவில்லையென்றால் ஏன் புலம்பினாய். நான் சென்று மக்களிடம் நியாயம் கேட்பேன்” என்றது. அதற்குப் பயந்த விவசாயி தன் மூத்த மகளைக் கொடுத்தான். நரி அந்த மகளை அழைத்துச் சென்றது. சில நாட்கள் கழித்து விவசாயி தன் மகளைக் காணச் சென்றான். அவள் நலமாக வாழ்வதைக் கண்டு மகிழ்ந்தான். நரி அந்தப் பெண்ணிடம் ஒரு மாதுளம் பழம் கொடுத்து அவள் தந்தையிடம் கொடுக்கச் சொன்னது.

அவளும் அதனைத் தந்தையிடம் கொடுத்தாள். அவர் அதனைத் தோட்டத்தில் நட்டு வைத்தார். அடுத்த நாள் நிறைய பழங்களை அது கொடுத்தது. அவர் விற்று வருகிறேன் என்று கூறி விற்கச் சென்றார். ஒருவர் அப்பழம் முழுவதையும் தானே வாங்கிக்கொண்டார் தினமும் கொண்டு வரும்படி கூறினார். அனைத்து நாளும் அனைத்துப் பழங்களையும் அவரே வாங்கிக்கொண்டார். கடைசியாக இருந்த ஒரு பழத்தைத் தாங்களே சாப்பிடலாம் என்று குடும்பத்தினர் முடிவு செய்து அதனை நறுக்கினர். அதிலிருந்து முத்துக்கள் உதிர்ந்தன. அதனைப் பார்த்த விவசாயி அதிர்ச்சி அடைந்தார். பழம் விற்றவரிடமிருந்து தன் பழங்களைத் தரும்படி கேட்டார். அதற்கு அவர் விவசாயியை அடித்து விரட்டி விட்டார்.

விவசாயி அழுதுகொண்டே தன் மகள் வீட்டிற்குச் சென்றார். நரி அங்கு நடந்ததைத் தெரிந்து கொண்டது. அதனால் நரி மீண்டும் அவருக்கு ஒரு குங்குமச் சிமிழைக் கொடுத்தது. அவள் தன் தந்தைக்கு அதனையும் கொடுத்தாள். அதை வைத்து கொண்டு என்ன செய்வது என்று வருந்தினார். வீட்டிற்குச் சென்ற அவர் “பசிக்கிறது ஏதாவது உணவு இருந்தால் தாருங்கள்” என்றார். அந்தக் குங்குமச் சிமிழில் இருந்து உணவு வந்தது. அனைவரும் வயிறு நிறைய உண்டனர். அதனை வைத்து மற்றவர்களுக்கும் தானமாக உணவினைத் தந்தனர். மன்னரும் அந்தச் செய்தியினை அறிந்து அவர் விவசாயியின் வீட்டிற்குச் சென்றார். விவசாயி படையுடன் வந்த மன்னனுக்கு அனைத்து விதமான வகைவகையான உணவுகளையும் தந்து மகிழ்வித்தார். மன்னர் தனக்கு அந்தக் குங்குமச்சிமிழ்

வேண்டுமென்று கூறினார். முடியாது என விவசாயி கூறியதால், விவசாயியிடமிருந்து குங்குமச் சிமழ் பறிக்கப்பட்டது. அவர் அழுதுகொண்டே தன் மகளைக் காணச் சென்றார். நரி முன்பு போலவே அவருக்கொரு தடியும், பாத்திரமும் தந்தது. அதனை அவர் எடுத்துச் சென்று பழம் வாங்கியவரிடம் தந்தார். அவர் அதனை வாங்கி தன் இல்லத்தில் வைத்துக் கொண்டார். தடியும் பாத்திரமும் அவரை அடித்தது. அவர்பயந்து கொண்டு தான் வாங்கிய பழங்களை விவசாயியிடமே தந்துவிட்டார்.

மறுநாள் மன்னரிடம் சென்று அவற்றைத் தந்தார். மன்னரையும் அது அடித்தது. மன்னரும் அந்த அடிக்குப் பயந்து குங்குமச்சிமிழைத் தந்துவிட்டார். இப்பொழுது விவசாயக் குடும்பம் நிம்மதியாக வளமையுடன் வாழ்ந்து வந்தது.

**கே.மகாலட்சுமி**

**இளநிலை இரண்டாமாண்டு வணிகவியல்**



# கட்டுரை




## தாய்மொழியின் அவசியம்

முன்னுரை

மொழி பற்றிய விளக்கம்

தாய்மொழி

தாய்மொழிப்பற்று

தாய்மொழிப்பற்று கொண்ட சான்றோர்கள்

தாய்மொழிக் கல்வியும் சுயசிந்தனையும்

முடிவுரை

**முன்னுரை**

"என்று பிறந்தவள் என்று உணராத இயல்பினளாம் எங்கள் தாய்;" என்று தாய்மொழியின் தன்மை பற்றி பாரதியார் கூறியுள்ளார். உலகில் பல ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளன. அவற்றில் பழமையான மொழிகளுள் எம் தாய்மொழியான தமிழ் மொழியும் ஒன்று. எமது தாய்க்கும் எமக்கும் எவ்வாறு நெருங்கிய பந்தம் உள்ளதோ அதுபோல் தமிழ் மொழிக்கும் எமக்கும் அழகிய பந்தம் உள்ளது என்பதனைப் பற்றிக் கட்டுரையில் காண்போம்.

**மொழி பற்றிய விளக்கம்**

தன்னுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டதே மொழியாகும். வாய்மொழியே முதலில் தோன்றியது. அதன் பின்புதான் எழுத்து மொழி தோன்றியது. எமது தாய்மொழி தொன்மைக் காலம் முதலே நாகரீகம் நிறைந்த பேச்சு மொழியையும், எழுத்து இலக்கணங்களையும், இலக்கிய மரபுகளையும் கொண்டு காணப்படுகிறது. உள்ளத்து எண்ணங்களை உணர்ச்சிபூர்வமாக வெளிப்படுத்துவது எமது தாய்மொழியாகும்.

**தாய்மொழி**

ஒருவன் பிறந்தது முதலாக மனதில் உள்ளவற்றைச் சிந்திப்பதற்கும் அதனைப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் அடிப்படையாக இருப்பது தாய்மொழி என்று சொல்லப்படுகிறது. இதுவே, மனிதனுக்கு ஓர் அடையாளத்தை வழங்குகிறது. உலகத்தில் எத்தனையோ மொழிகள் காணப்பட்டாலும் அவர் அவருக்கு தன்னுடைய தாய்மொழி மிகவும் உயர்வானது. தனது தாய்மொழியில் கற்பதும் தாய்மொழியில் பேசுவதும் அவர்களுக்குச் சிறந்த உணர்வை எப்போதும் தரும்.

**தாய்மொழிப்பற்று**

தாய்மொழி மீதான பற்று ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியமானதாகும். எமது தாய்மொழியான தமிழ் பழமையானது. பெருமை மிக்கது. அழியாதது. இதனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது தமிழர்களாகிய நம் ஒவ்வொருவருடைய கடமை. நாம் நமது கல்வியைத் தாய்மொழியில்

கற்பதே சாலச் சிறந்ததாகும். இதுவே எமது அறிவைப் பெருக்கும். பிறமொழி ஆதிக்கத்தால் வேறுமொழிகளில் கல்வி என்பது புரியாத கல்வியாக அமைந்து விடும். பிற மொழிகள் மீது மோகம் கொண்டு தாய்மொழியை நிந்திப்பது தனது தாயை வெறுப்பதற்குச் சமம்.

**தாய்மொழிப்பற்று கொண்ட சான்றோர்கள்**

தாய்மொழி மீது பற்று கொண்ட சான்றோர்களைப் பட்டியலிட்டால் அது எண்ணிலடங்காத ஒன்று.

''திருவள்ளுவர், ஔவையார், கபிலர், பரணர், கம்பர், சேக்கிழார், பாரதியார், பாரதிதாசன்'' என அன்று துவங்கி இன்றுவரை பலர் தமிழ் மீது அதிகப் பற்று கொண்ட படைப்பாளியினராக இருந்து வந்துள்ளனர். இவர்கள் தமது தமிழ் படைப்புகளால் தமது தாய்மொழிப் பற்றை இந்தச் சமூகத்துக்குக் கொடுத்துச் சென்றிருக்கிறார்கள். துமிழ்த் தாயை வாழ வைத்து மறைந்திருக்கின்றனர். தமிழ் வாழும் வரை அவர்களும் வாழ்வார்கள்.

**தாய்மொழிக் கல்வியும் சுயசிந்தனையும்**

எப்போதும் நமது குழந்தைகள் தமது தாய்மொழியில்தான் கல்வி கற்க வேண்டும். அது தான் அவர்களது சிந்தனைத் திறனை வளர்க்கும். அவர்களை ஆக்கப்பூர்வமான பிரஜைகளாக உருவாக்கும்.

உலகத்தின் வளர்ந்த நாடுகள் தமது நாட்டு தாய்மொழி மூலமாகவே குழந்தைகளுக்குக் கல்வியைக் கற்பிக்கின்றன. இதனைப் போல நம் நாட்டு மக்களுக்கும் இச்சிந்தனை வளர வேண்டும். ஏனெனில் தாய்மொழிக் கல்வியின் மூலமாகவே ஒரு நாடானது முன்னேறும் என்பதனை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

**முடிவுரை**

''தாய்மொழி என்பது தாய்ச் சொல்லின் மொழி மட்டுமல்ல, தாய்மை உணர்வோடு
பயன்படுத்தப்பட வேண்டிய மொழியாகும்,'' - **பாரதியார்**

எமது தாய்மொழி உணர்வில் இருந்து உருவானது. அறிவியல், விஞ்ஞானம், வானியல் ஜோதிடம், பொருளியல், கணிதம், புவியியல், சமூகவியல் என எல்லாத் துறைகளிலும் தேவையான அளவுக்கு எமது மொழியில் கல்வி கற்பதனை நாம் எப்போதும் பெருமையாகக் கருத வேண்டும். மொழிகளின் மொழியாகிய நம் தாய்மொழியைக் காக்க வேண்டும். இந்த உணர்வு நம் அனைவருக்கும் வேண்டும்.

**வா.தர்சினி**

**இளநிலை இரண்டாமாண்டு ஆங்கிலம்**

# பாரதியின் கனவு தேசம்



**குறிப்புச்சட்டகம்:**

- ➢ முன்னுரை
- ➢ பாரதியாரின் வாழ்க்கை
- ➢ பாரதியும் பாரதமும்
- ➢ பாரதியின் நாட்டுரிமை
- ➢ பாரதியாரின் புதிய பாரதம்
- ➢ பெண்ணியமும் பாரதியும்
- ➢ முடிவுரை

**முன்னுரை:**

சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற் புதிது சோதிமிக்க நவகவிதை
எந்நாளும் அழியாத மாகவிதை....!

என்று சூளுரைத்தவர் மகாகவி பாரதியார். அத்தகைய மேன்மை பெற்றவரின் கனவு எத்தன்மையது என்பதனைப் பின்வருமாறு காண்போம்.

**பாரதியாரின் வாழ்க்கை:**

சுப்ரமணிய பாரதியார் அவர்கள், சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுப்பிரமணியன். அவருடைய 5 வயதில் தாயார் காலமானார். இவர் இளம் வயதிலேயே தமிழில் புலமைப் பெற்றுத் திகழ்ந்தார்.

“இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்,”

என்று பாரதி கவிப்புலமையால் பாரதி என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதலே “சுப்பிரமணிய பாரதியார்” என அழைக்கப்பெற்றார்.

**பாரதியும் பாரதமும்:**

பாரதத்தின் சிறப்புக்களை மட்டும் பாரதி மார்தட்டிச் சொல்லவில்லை. அதன் குறைகளையும் மக்களின் சோம்பலையும், துயரங்களையும் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றார். புதிய கோணங்களைக் கொண்டு நமக்குப் புத்தி புகட்டுகிறார், நம்பிக்கையூட்டுகிறார்.

“சாத்திரம் வளருது, சாதி குறையுது நேத்திரம் திறக்குது, நியாயந் தெளியுது, பழைய பயித்தியம் படீலென்று தெரியுது, வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது, சொல்லடி சக்தி, மலையாள பகவதி, தர்மம் பெருகுது, தர்மம் பெருகுது”

இந்தியா மேன்மையுற, நம்மிடையேயுள்ள குறைகள் நீங்க, மக்கள் ஒற்றுமையுடன் வாழ வழிகாட்டும் பாரதியின் அரிய கருத்துக்கள் போற்றிப் புகழத்தக்கது. கோழைத் தனத்தை விடும்படி எள்ளி நகையாடுகிறார்.

“அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்துநின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே”

என்று கர்ஜித்து அச்சத்தை ஓட்டுகிறார். அச்சத்தை விடுத்து துணிச்சலாகச் செயலாற்ற வலியுறுத்துகிறார்.

**பாரதியின் நாட்டுரிமை:**

சுதந்திர இந்தியா எந்தெந்தத் துறையில் எவ்வாறு முன்னேற வேண்டும் என்ற தனது எண்ணத்தை ஒரு பொருளாதார நிபுணரைப் போல் வரையறுத்துத் தம்முடைய கவிதைகளின் மூலம் மக்களுக்கு வழி காட்டுகிறார்.

''ஆய்தம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம் கல்விச்
சாலைகள் வைப்போம்''

என்று நாட்டில் உள்ளோர் அனைவரும் பயன்பெறும் வகையில் வழிவகை கூறுகிறார்.
இதேபோல் தனியொரு மனிதனுக்கு உணவில்லாத நிலையை,

''தனியொருவனுக்கு உணவில்லை என்றால் ஜகத்தினை அழித்திடுவோம்,''

என்ற தனிமனிதன் உயிர்வாழ அடிப்படையாக இருக்கக்கூடிய உணவிற்கு வழிவகை செய்கிறார். எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்னும் ஒற்றுமை உணர்ச்சியைப் பாரதி நம்முள் விதைக்கிறார்.

**பாரதியாரின் புதிய பாரதம்:**

பாரதியார் தனது கற்பனையில் புதிய பாரதம் வந்துவிட்டதை எண்ணிக் கவிநடை பாடுகிறார். புதிய பாரதத்தில் இருக்க தகுதியற்றவர்களை போ போ என்று வெறுத்துரைக்கிறார். தகுதியுள்ளவர்களை வா வா வா என்று அன்புடன் வரவேற்கிறார்.

''வலிமை யற்ற தோளினாய்ப் போ போ போ மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ பொறியிழந்த விழியினாய் போ போ போ
தெளிவுபெற்ற மதியினாய் வா வா வா சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமைகண் டிரங்குவாய் வா வா வா ஏறுபோல் நடையினாய் வா வா வா''

எனத் தனது பாரதத்தில் எத்தகையோர் இருக்க வேண்டும் என்பதனை எடுத்துரைக்கிறார்.

**பெண்ணியமும் பாரதியும்:**

பெண்களுக்குச் சுதந்திர வேட்கையைத் தூண்டி, பெண்களைச் சிறகடித்துப் பறக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் படைத்தவர். பெண்களுக்குக் கல்வி உரிமை வேண்டும் எனக் கோஷங்களை எழுப்பிய முண்டாசுக் கவிஞன் பாரதி.

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்''

என்று பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்தவர் பாரதி. பெண்களை மதிக்கத் தெரிந்த பாரதி நாட்டின் பெரிய சக்தியாகவே பெண்களைப் பார்த்தார்.

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்களை நடத்த வந்தோம்,''

எனக் கவிதைகளால் வசைப்பாடினார்.
பெண்ணடிமைத்தனம் என்பது நாட்டிற்கே அடிமைத்தனம் என எச்சரித்த பாரதி, தேசிய விடுதலை இயக்கம் மூலம் விடுதலைப் போராட்டங்களில் இடம்பெறச் செய்தார்.

**முடிவுரை:**

விடுதலை பெற்ற பாரத தேசத்தில் வாழும் நாம் இவர் கூறுகிற முன்னேற்றங்கள் வர நானூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா? நான்கு ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா? எனினும் ஒன்றுபட்டாலே வென்றுவிடலாம் என்ற பாரதியின் மந்திர வரிகளால் பாரதியின் கற்பனைத் தேசத்தை உதயமாக்குவோம்.

**சு. சுகுணா**
**முதுகலை முதலாமாண்டு**
**தமிழிலக்கியம்**

# தாய் மொழியின் பெருமை




முன்னுரை

தாய்மொழி

உலகத் தாய்மொழி தினம்

தாய்மொழியின் முக்கியத்துவம்

தாய்மொழிக் கல்வியின் அவசியம்

தாய் மொழிப் பற்று

முடிவுரை

**முன்னுரை**

மொழி நம் பண்பாட்டின் விழி. மொழியும் நம் வாழ்க்கைக்கு முக்கியமான ஒன்றாகும். பேச்சைப் போல் அதில் உள்நுழைந்து வாழ்வின் வழியை நமக்குக் காட்டும் தாய்மொழி, அதைவிட முக்கியம். மனிதனது பிறப்பாலும், மரபாலும் பின்னிப் பிணைந்த ஒரு விவரிக்க முடியாத அங்கமே தாய்மொழி ஆகும்.

உலகின் மிகத் தொன்மையான மொழியான தமிழ்மொழி என் தாய்மொழி என்று கூறும் போது, அதன் பெருமைக்கு அளவே இல்லை எனலாம். தொன்மை, இனிமை, எளிமை போன்ற பல சிறப்புகளைக் கொண்ட தாய்மொழியான எம் தமிழ்மொழி பற்றி காணலாம்.

**தாய்மொழி**

அறிவின் வளர்ச்சி தாய்மொழியால் மட்டுமே சாத்தியம். தாய்மொழியே நம் அடையாளம், பண்பாட்டின் நீட்சி, சிந்தையில் விந்தையை ஏற்படுத்தும் ஆற்றல் தாய்மொழிக்கு மட்டுமே உண்டு. மக்களால் பேசப்படாத மொழி மரித்துப் போகிறது. உலகில் இரண்டு வாரங்களுக்கு ஒரு மொழி வழக்கிழந்து அழிந்து போகிறது. மொழியின் உயிர்ப்பு மக்கள் பயன்பாட்டில் இருக்கிறது.

**உலகத் தாய்மொழி தினம்**

உலக அளவில் ஆண்டுதோறும் பல்வேறு விசயங்களை நினைவுகூரும் வகையில் பல தினங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுக் கொண்டாடப்பட்டுவருகின்றன. அந்தத் தினத்தைக் கொண்டாடுவதன் நோக்கத்தின் மேன்மையும் வெளிப்பட்டு வருகிறது.

அவ்வகையில் மனிதகுலத்தின் மூச்சாக விளங்குவது தாய்மொழி ஆகும். இத்தகைய தாய்மொழிக்கு ஒரு தினம் கொண்டாடப்படுவது சிறப்புக்குரியதாகும். அந்த வகையில் பிப்ரவரி மாதம் 26ம் தேதியன்று தாய்மொழி தினம் நினைவுகூரப்படுகிறது.

**தாய்மொழியின் முக்கியத்துவம்**

எழுத்தறிவிற்குத் தாய்மொழி மிகவும் முக்கியமானதாகும். தாய்மொழியில் கல்வி கற்றவர்கள் அதிகமான எழுத்தறிவு உள்ளவர்களாக உள்ளனர். மனிதன் தனது தாய்மொழியை முதலில் கற்றுக்கொள்கின்றான்.

பிறருடன் பேசிப் படிக்கவும் தனது உணர்வுகளை மொழியின் மூலம் விவரிக்கவும் தாய்மொழி மிகவும் அவசியமாகும். மனிதனது சிந்தனை ஆற்றலுக்கு முதலில் துணை நிற்பது தாய்மொழியாகும்.

நாகரீக வளர்ச்சிக்கு தனது பண்பாடு, கலாச்சார மரபுகளை அறிந்துகொண்டு அதன்படி ஒழுக தாய்மொழி முக்கியமாகத் திகழ்கின்றது.

**தாய்மொழிக் கல்வியின் அவசியம்**

தாய்மொழியில் கல்வி கற்பதன் மூலம் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளைக் குழந்தைகள் மத்தியில் கொண்டு வரலாம். சிந்தனை அவனது தாய் மொழியிலேயே தொடங்குகின்றது. அந்த வகையில் சிந்தனைக்குத் தாய்மொழியே தேவைப்படுகிறது. எனவே தாய்மொழிக் கல்வி மிக அவசியமாகும்.

**தாய்மொழிப் பற்று**

உலகில் எத்தனையோ மொழிகள் காணப்படினும் அது தாய்மொழிக்கு ஈடில்லை. தாய்மொழி மீது கொண்ட அளவு கடந்த அன்பே தாய்மொழிப்பற்று ஆகும். தனது தாய்மொழியில் கற்பதும் தாய்மொழியில் பேசுவதும் அந்த உணர்வைத் தரும்.

தாய்மொழி மீதான பற்று அனைவரிடத்திலும் காணப்பட வேண்டும். அந்த வகையில் எமது தமிழ்மொழியின் மீது நாம் மட்டுமல்ல: சான்றோரும் பற்றுக்கொண்டு நமது தாய்மொழியின் சிறப்பை உலகிற்குத் தெரியப்படுத்தியுள்ளனர். அவர்களுள் திருவள்ளுவர், ஔவையார், கம்பர், சேக்கிழார், பாரதியார், பாரதிதாசன் போன்ற சான்றோர்களைக் குறிப்பிடலாம்.

**முடிவுரை**

அறமொழி, பக்தி மொழி, செம்மொழி, அறிவியல் மொழி, முத்தமிழ் மொழி என்று எத்தனையோ புகழ் மொழியாக அழைக்கப்படும் நம் தாய்மொழியாம் தமிழ் மொழியைப் போற்றுவதும் நமது கடமையாகும்.

தாய்மொழியை வளப்படுத்தும் பொறுப்பு நமக்கு உண்டு என்பதை உணர்ந்து தாய்மொழியைக் காப்போம்.

**பி.எல்.ஜீவிதா**

**இளநிலை முதலாமாண்டு ஆங்கிலம்**

# மருத்துவக் குறிப்புகள்



1. கடற்சங்கைப் பசும்பால் விட்டு அரைத்துப் பருக்கள் மீது தடவி வர இரண்டு நாளில் பருக்கள் மறையும்.
2. வாழைப்பட்டையைத் தீயில் காட்டிச் சூடேற்றிப் பிழிந்து ஓரிரு துளிகள் விட காதுவலி குணமாகும்.
3. சப்போட்டா பழம் தினமும் பகல் பொழுதில் உண்டுவர இரவில் நன்றாகத் தூக்கம் வரும்.
4. ஓமவல்லி இலை, காம்பு இவற்றைக் கசாயம் செய்து குடித்து வர இருமல், சளி, காய்ச்சல் குணமாகும்.
5. கொய்யா கொழுந்து இலையை மென்று தின்றால் குடல்வாயு நீங்கும்.
6. நந்தியாவட்டைப் பூவால் ஒத்தடம் கொடுக்க கண் எரிச்சல் தீரும்.
7. நிலவேம்பு வேர், கண்டங்கத்திரி வேர் இரண்டையும் சேர்த்து கசாயம் செய்து மூன்று முறை குடிக்க மலேரியா குணமாகும்.
8. தும்பை இலைச் சாறு தேனில் கலந்து கொடுக்க தேள் நஞ்சு இறங்கும்.
9. மஞ்சள், அருகம்புல், சுண்ணாம்பு கலந்து பூசி வர நகச்சுற்று குணமாகும்.

**பா. சாரணி**

**இளங்கலை மூன்றாமாண்டு தமிழிலக்கியம்**

# விடுகதை




1. மூன்று கால் யானை, அது தின்பதெல்லாம் கருப்பு. அது என்ன?

   அடுப்பு

2. மேலே பூப்பூக்கும், கீழே காய் காய்க்கும். அது என்ன?

   வேர்க்கடலை

3. மூடாத வாய்க்கு ஒரு முழு வால். அது என்ன?

   அகப்பை

4. சின்னப்பயல் உரசினால் சீறிப் பாய்வான். அவன் யார்?

   தீக்குச்சி

5. முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை. அது என்ன?

   நாக்கு

6. பார்த்தால் கல், பல் பட்டால் நீர். அது என்ன?

   பனிக்கட்டி

7. ஐந்த அடுக்கு நான்கு இடுக்கு. அது என்ன?

   விரல்கள்

8. ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு படி தண்ணீர். அது என்ன?

   தேங்காய்.

**ர.பவித்ரா**

**இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல்**



# விடுகதை




1. அடித்தாலும், உதைத்தாலும் அழ மாட்டான். அவன் யார்?

    பந்து.

2. யாரும் ஏற முடியாத மரம், கிளைகள் இல்லாத மரம். அது என்ன?

    வாழை

3. ஆயிரம் அறைகள் கொண்ட பிரம்மாண்டமான மிட்டாய்க் கடை. அது என்ன?

    தேன்கூடு

4. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம். அது என்ன?

    தராசு

5. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?

    வாழைப்பூ

6. கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள். அவள் யார்?

    மெழுகுவர்த்தி

7. உணவு கொடுத்தால் வளரும் நீர் கொடுத்தால் அழியும். அது என்ன?

    நெருப்பு

8. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும். அவன் யார்?

    தேள்

9. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துகள்?

    வெண்டைக்காய்.

10. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது. அது என்ன?

    தேங்காய்

**ச. கனிமொழி,**

**முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்**



# தெரிந்து கொள்வோம்

## பழமொழிகள்

1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
2. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
3. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
4. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு நல்ல மனிதனுக்கு ஒரு சொல்லு.
5. தன் வினை தன்னைச் சுடும்.
6. எறும்பு ஊற கல்லும் தேயும்.
7. ஆழம் தெரியாமல் காலை விடாதே.
8. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
9. மனம் உண்டானால் மார்க்கம் உண்டு.
10. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

**பா.சுனிதா**
**இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல் துறை**

## பழமொழிகள்

கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது.

ஏழைப் பேச்சு அம்பலம் ஏறாது.

கூரை ஏறிக் கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுண்டம் போறானாம்.

பந்திக்கு முந்து படைக்குப் பிந்து.

உண்டவன் பாய் தேடுவான். உண்ணாதவன் இலை தேடுவான்.

தேரை இழுத்துத் தெருவில் விட்டது போல.

கேட்டதெல்லாம் நம்பாதே! நம்பியதெல்லாம் சொல்லாதே!

கொடுக்கிறவனைக் கண்டால் வாங்குகிறவனுக்கு இளக்காரம்.

கஞ்சி கண்ட இடம் கைலாசம். சோறு கண்ட இடம் சொர்க்கம்.

**ச.ஜெனிபர்ரோஸி**

**முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்**

# தகவல் களஞ்சியம்



## பொது அறிவு

1. ஹார்மோன் இல்லாத உயிரினம் எது?
   பாக்டீரியா
2. வாழ்நாள் முழுவதும் நீர் பருகாத விலங்கு எது?
   எலிக்கங்காரு
3. எலும்பிலிருந்து கிடைக்கும் உரம் எது?
   போன்மீல்
4. நோபல் பரிசு அறிவிக்காத ஆண்டு எது?
   1940
5. ஆரத்திப்பழம் என்று தூய தமிழில் அழைக்கப்படும் பழம் எது?
   ஆப்பிள்
6. அறிவு மிகுந்த முதல் கம்ப்யூட்டரின் பெயர் எது?
   எலிசா
7. கூடு கட்டி வாழும் ஒரே மீன் எது?
   ஸ்டிக்ல் பேக்
8. எந்தப் பூக்களில் வண்டு மொய்க்காது?
   சண்பகப்பூ, வேங்கைப்பூ
9. தூங்கநிலம் என்றழைக்கப்படும் நாடு எது?
   கானா
10. நரியின் கர்ப்பக்காலம் எவ்வளவு?
    52 நாட்கள்
11. மயிலுக்கு எத்தனை இறகுகள் உள்ளன?
    150
12. பௌவம் என்பது ஒரு மலரின் பெயர். அது என்ன?
    தாமரை
13. மஞ்சள் கேக் என்றழைக்கப்படுவது எது?
    அடர்ப்பிக்கப்பட்ட யுரேனியம்
14. உடலில் ஓடு உள்ள ஒரே பாலூட்டி இனம் எது?
    ஆமை
15. இந்தியாவில் சோப்பு அறிமுகமான ஆண்டு எது?
    1889
16. நியுயார்க்கிற்குச் சிறப்புப் பெயர் உண்டு. அது என்ன?
    பிக் ஆப்பிள்
17. தேக்கு மரத்தை விட கடினமான மரம் எது,?
    ஈட்டி மரம்
18. குரங்குகள் இல்லாத நாடு எது?
    ஆஸ்திரேலியா
19. கொசுக்களுக்கு எத்தனைப் பற்கள் உள்ளன?
    22
20. அழகின் தேவதை என்றழைக்கப்படும் கிரகம் எது?
    புதன்

**ப. மகேஸ்வரி.**
**இளநிலை மூன்றாமாண்டு கணிதவியல்**

## பொது அறிவு



1.தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தை உருவாக்கியவர் யார்?

சரபோஜி மன்னர்

2. தமிழ்மொழியில் வெளியான முதல் நாவலின் பெயர் என்ன?

பிரதாபமுதலியார் சரித்திரம்

3. கங்கை கொண்ட சோழபுரம் கோவிலைக் கட்டியவர் யார்?

முதலாம் இராஜேந்திரச் சோழன்

4. செங்கோட்டையைக் கட்டியவர் யார்?

ஷாஜகான்

5. இந்தியாவில் குடிமக்கள் தினம் கொண்டாடப்படும் நாள் எது?

ஜனவரி—16

6. சர்க்கரையின் மற்றொரு பெயர் என்ன?

அஸ்கா

7. வெப்பமானியைக் கண்டுபிடித்தவர் யார்?

சிக்ஸ்

8. சூரிய ஒளி பூமிக்கு வந்து சேர எடுத்துக்கொள்ளும் நேரம் எவ்வளவு?

8 நிமிடம் 16.6 நொடிகள்

9. ராக்கெட்டில் திரவ எரிபொருளாகப் பயன்படுவது எது?

ஆக்சிஜன்

10. கூட்டுக் குடும்பமாக வாழும் உயிரினம் எது?

எறும்புகள்

**ப.கிருத்திகா**

**இளநிலை மூன்றாமாண்டு**

**ஊட்டச்சத்து மற்றும் உணவு மேலாண்மை**

# கடி ஜோக்

1. திருவள்ளுவர் 1330 குறளில்

   எழுதியிருந்தாலும், அவரால் ஒரு

   குரலில்தான் பேச முடியும்.

2. மீன் பிடிக்கிறவனை மீனவன் என்று சொல்ல முடியும்.

   ஆனால்

   நாய் பிடிக்கிறவனை நாயவன் என்று சொல்ல முடியுமா?

3. என்னதான் ஒருத்தன் குண்டா இருந்தாலும்

   ஆவனைத் துப்பாக்கிக்குள்ள போட முடியுமா?

4. தேள் கொட்டினா வலிக்கும். பாம்பு கொட்டினா வலிக்கும்.

   முடி கொட்டுனா வலிக்குமா?

5. ஸ்கூல் டெஸ்ட்ல பிட் அடிக்கலாம்

   காலேஜ் டெஸ்ட்ல பிட் அடிக்கலாம்

   பிளட் டெஸ்ட்ல பிட் அடிக்க முடியுமா?

6. ஏழு பரம்பரைக்கு உக்காந்து சாப்பிட

   பைசா இருந்தாலும், பாஸ்ட்ஃபுட் கடையில

   நின்னுத்தான் சாப்பிடணும்.

ப.விஜயலட்சுமி

முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்

# ஓவியங்கள்



எம். முத்துலெட்சுமி

இளநிலை இரண்டாமாண்டு ஆங்கிலம்




எம். பரிதா பர்வின

இளநிலை மூன்றாமாண்டு கணிப்பொறி அறிவியல்




எஸ். ராஜவர்த்தினி

அறிவாற்றலுடன் கூடிய கணினி அறிவியல்




**ஐ.சர்மிளா**

**அறிவாற்றலுடன் கூடிய கணினி அறிவியல்**



| | | |
|---|---|---|
| எழுத்தாளர் | : | அம்பை |
| இயற்பெயர் | : | சி.எஸ்.லட்சுமி |
| ஆண்டு | : | 1944 |
| ஊர் | : | கோயம்புத்தூர் |
| கணவர் பெயர் | : | விஷ்ணுமாத்தூர் |
| சாகித்ய அகாடமி விருது பெற்ற நூல் | : | சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை (டிசம்பர்-31.2021) |